Q.C-027

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Forest Department Test – Fundamental Rules of Tamil Nadu Government , Tamil Nadu State Service Rules etc., (with Books) | 121 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour                                        Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. "Compensatory Allowance" means
ஈட்டுப்படி என்பது

(A) a person availing his joining time
ஒரு தனியர் பணிசேர் காலத்தினை துய்ப்பது

(B) A pay sanctioned apart from his basic pay
அடிப்படை ஊதியத்துடன் கூடுதலாக அளிக்கப்படுவது

(C) A pay sanction to justify the grant
ஒரு நிகழ்வினை ஈடுசெய்யும் வகையில் அளிக்கப்படுவது

(D) None of the above
மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

2. "Compulsory wait" means
"கட்டாய காத்திருப்பு" என்பது

(A) A person availing his joining time
ஒரு தனியர் பணிசேர் காலத்தினை துய்ப்பது

(B) A person kept waiting on administrative reason
நிர்வாக காரணங்களினால் ஒரு தனியர் பணியில் சேர அனுமதிக்கப்படாமல் இருத்தி வைப்பது

(C) A person under suspension
தற்காலிக பணிநீக்க காலம்

(D) None of the above
மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

3. Supernumerary post is being created on the event of
மிகைப்பணியிட பதவி என்பது எப்போது ஏற்படுத்தப்படுகிறது?

(A) When a Government servant dies
ஒரு அரசு ஊழியர் இறக்கும் போது

(B) due to non–availability of regular post
அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் காலிப் பணியிடம் இல்லாத போது

(C) A person appointed under compassionate ground
கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படும்போது

(D) None of the above
மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

4. Agricultural Engineering Supervisors who have passed "A" and "B" group with how many years of service can be treated as Junior Engineers
வேளாண்மை பொறியியல் பட்டதாரிகள் "A" மற்றும் "B" பிரிவுகளில் தேர்ச்சி பெற்று எத்தனை ஆண்டு கால பணிக்காலத்தினை பெற்றிருந்தால் அவர்களை இளநிலை பொறியாளராக கருதலாம்?

(A) 2 Years
2 ஆண்டுகள்

(B) 4 Years
4 ஆண்டுகள்

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

5. If a Government servant avails leave during punishment period, will the punishment period would be extended?
ஒரு அரசு ஊழியர் தனது தண்டனைக் காலத்தில் ஏதேனும் விடுப்பு அனுபவித்தால், மேற்படி தண்டனைக்காலம் நீட்டிக்கப்படுமா?

(A) If government decides
அரசு முடிவெடுக்கும் பட்சத்தில்

(B) Based on his service and good behaviour
அவரது நன்னடத்தை அடிப்படையில்

(C) Yes
ஆம்

(D) Appointing authority discretion
நியமன அதிகாரி விரும்பும் பட்சத்தில்

6. "Selection Grade" is awarded to a government when he completes?
ஒரு அரசு ஊழியருக்கு "தேர்வுநிலை" எப்போது வழங்கப்படுகிறது?

(A) 10 years of service
10 ஆண்டுகாலம் நிறைவடைந்ததும்

(B) 12 years of service
12 ஆண்டுகாலம் நிறைவடைந்ததும்

(C) 15 years of service
15 ஆண்டுகாலம் நிறைவடைந்ததும்

(D) 25 years of service
25 ஆண்டுகாலம் நிறைவடைந்ததும்

7. If a Government when officiating undergoes a training/study institution whether the period can be taken in to account for sanction of increment
ஒரு அரசு அலுவலர் ஏதேனும் பயிற்சி அல்லது அரசு முறையாக கல்வி பயிலுகையில் அவர் மேற்படி பயிற்சி/கல்வி பயிலும் காலம் ஊதிய உயர்வுக்கு கணக்கில் கொள்ளப்படுமா?

(A) If Head of Department approves
துறைத்தலைமை முடிவு

(B) With the permission from TNPSC
தேர்வாணையத்தின் முடிவின்படி

(C) Yes
ஆம்

(D) With the sanction of Government
அரசு அனுமதியுடன்

8. When a government servant reduced to a lower category as a penalty who should indicate the period of operation of that punishment.
ஒரு அரசு அலுவலர் தண்டனையின் படி கீழ் நிலை இறக்கம் செய்யப்படும்போது தண்டனைக் காலத்தினை எந்த அலுவலர் முடிவு செய்யப்பட வேண்டும்?

(A) Head of Department
துறைத்தலைமை

(B) Government
அரசு

(C) Authority who orders the punishment
இறுதி ஆணை பிறப்பிக்கும் அலுவலர்

(D) Appointing authority
நியமன அலுவலர்

9. When a Government servant is compulsorily retired under sub–rule (2) rule of 56 while on leave, whether he can be permitted to draw due compensatory allowances like House Rent Allowances
ஒரு அரசு அலுவலர் துணை விதி (2) மற்றும் 56ன் கீழ் கட்டாய ஓய்வில் செல்ல ஆணையிடப்படும் பட்சத்தில் அவர் வீட்டு வாடகைப்படி போன்ற ஈட்டுப்படிகளை தகுதியுடையவரா?

(A) Yes
ஆம்

(B) With the approval of Government
அரசு முடிவின்படி

(C) With the approval of Head of Dept
துறைத்தலைமை முடிவின்படி

(D) Not eligible
தகுதியற்றவர்

10. When a Government servant is permitted to occupy Government quarters during leave, whether the rent should be recovered from him at the rate at which he is allowed to pay while on duty
ஒரு அரசு அலுவலர் விடுப்பில் இருக்கையில் அரசு குடியிருப்பினை பயன்படுத்தி வரும் அவர் வீட்டு வாடகையினை அவரது ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டுமா?

(A) Should not be
இல்லை

(B) with the approval of Head of Department
துறைத்தலைமை ஆணையின்படி

(C) After obtaining orders from Government
அரசு ஆணை பெற்ற பின்

(D) Yes
ஆம்

11. Whether a Government servant shall accept any present or emolument of any kind from any foreign Government without the consent of the President of India?
ஒரு அரசு அலுவலர் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி ஏதேனும் அமைப்பிடம் இருந்து மதிப்பூதியம் அல்லது வெளிநாட்டு அமைப்பிடம் இருந்து ஊதியம் ஏதேனும் பெற அனுமதி உண்டா?

(A) No
இல்லை

(B) With the concurrence of Govt of India
இந்திய அரசு அனுமதியுடன்

(C) If Government approves
அரசு ஆணை பெற்ற பின்

(D) Yes
ஆம்

12. Whether a School Assistant who is placed in full additional charge of the posts of Headmaster or Headmistress in a Government Secondary and Training School and draws additional pay there for, can be allowed the special pay attached to the letter post?
ஒரு பள்ளி உதவியாளர் பள்ளி தலைமை ஆசிரியர் பொறுப்பினை கூடுதலாக கவனித்து வரும்போது அந்த பதவிக்கு உண்டான சிறப்பு ஊதியத்தினை பெற அவர் தகுதி உள்ளவரா?

(A) No
இல்லை

(B) With the sanction of the Director
இயக்குநரின் ஆணை பெற்ற பின்னர்

(C) With the approval of Government
அரசு ஆணை பெற்ற பின்

(D) Yes
ஆம்

13. Whether a Government servant who is dismissed or removed from the public service but is reinstated on appeal or revision is entitled to count his former service for leave?

ஒரு அரசு ஊழியர் பணியில் இருந்து நீக்கம் (Dismiss) செய்யப்பட்ட பின்னர் மீண்டும் மேல் முறையீடு செய்யப்பட்டு மறு பணி நியமனம் பெறுவாராயின் அவர் முன்னம் வகித்த விடுப்பின், பதவியின் பணிக்காலத்தினை கணக்கில் கொள்ளலாமா?

(A) If the appointing authority decides
நியமன அதிகாரி முடிவின்படி

(B) By TNPSC
தேர்வாணையத்தின் முடிவின்படி

(C) Yes
ஆம்

(D) No
இல்லை

14. Whether Leave can be claimed as a right for a Government Servant?

ஒரு அரசு ஊழியர் விடுப்பினை துய்ப்பது அவரது உரிமையாக கருதப்படுமா?

(A) Yes. it's right
ஆம் அவரது உரிமையாகும்

(B) Decided by Head of office
அலுவலக தலைவரின் முடிவின்படி

(C) No, authority empowered can only sanction
இல்லை ஒப்புதல் வழங்கும் அலுவலரின் முடிவின்படி

(D) Sanctioned by authority like Head of Dept.
துறைத்தலைவரின் முடிவின்படி

15. Whether a Government servant may be transferred to foreign service against his will?

ஒரு அரசு ஊழியர் அவரது விருப்பத்திற்கு மாறாக வெளி அலகிற்கு (Foreign service) மாற்றப்பட இயலுமா?

(A) Yes
ஆம்

(B) By the competent authority
அதிகாரம் பெற்ற அலுவலரால்

(C) No
இல்லை

(D) only by the TNPSC
தேர்வாணையத்தின் அனுமதியுடன்

16. Late attendance: What action will be taken if a government servants requested for One hour permission but attends office after 1.00 pm
தாமத வருகை: ஒரு அரசு அலுவலர் ஒரு மணிநேரம் தாமத அனுமதி கோரிய பின்னர் அலுவலகத்திற்கு பிற்பகல் ஒரு மணிக்கு பணியில் சேர ஆஜரானால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

(A) Permissions can be extended
அனுமதி நீட்டிக்கப்படலாம்

(B) Should be treated as Full day CL
முழு நாள் தற்செயல் விடுப்பு

(C) Should be treated as Half day CL
அரைநாள் தற்செயல் விடுப்பு

(D) Discretion of head of office
அலுவலக தலைவரின் முடிவின்படி

17. Whether a government servant can attend office on Government holidays on his own?
ஒரு அரசு அலுவலர் அரசு விடுமுறை நாட்களில் தன்னிச்சையாக அலுவலகத்திற்கு வந்து பணி புரிய அனுமதிக்கப்படலாமா?

(A) Yes
ஆம்

(B) Only with the permission of Head of Office if needed
அலுவலக தலைவரின் அனுமதியுடன்

(C) No
இல்லை

(D) No permission is required
அனுமதி தேவையில்லை

18. Once in how many years a new Personal Register should be opened?
தன்பதிவேடுகள் - எப்போதெல்லாம் தன்பதிவேடு புதியதாக துவக்கப்பட வேண்டும்?

(A) Every year
ஒவ்வொரு ஆண்டும்

(B) For every two years
இரண்டாண்டுக்கு ஒருமுறை

(C) Once in 5 years
ஐந்தாண்டுக்கு ஒருமுறை

(D) For every Six months
ஆறுமாத காலத்திற்கு ஒருமுறை

19. Who maintains a Fair Copy Register?
சுத்த நகல் பதிவேடு யாரால் பராமரிக்கப்படுகிறது?

(A) Office Superintendents
கண்காணிப்பாளரால்

(B) Typists
தட்டச்சு பிரிவில்

(C) Section Junior Assistants
இளநிலை உதவியாளர்

(D) Assistants
உதவியாளர்கள்

20. When a seat clerk sends his file to a head of office in which column of the Personal register he should indicate?
ஒரு இருக்கையாளர் ஒரு கோப்பினை உயர் அலுவலர்களுக்கு அனுப்புகையில் தன்பதிவேட்டில் எந்த கலத்தில் பூர்த்தி செய்த பின்னர் அனுப்புவார்?

(A) Column 7
கலம் 7

(B) Column 8
கலம் 8

(C) Column 6
கலம் 6

(D) None of the above
ஏதுமில்லை

21. What are the compulsory deductions from the subsistence grant?
பிழைப்பூதியத்தில் கட்டாய பிடித்தம்

(A) Income Tax, House Rent
வருமான வரி, வீட்டு வாடகை

(B) Income Tax, GPF Subscription
வருமான வரி, பொது வருங்கால வைப்பு நிதி

(C) GPF recoveries, House Rent
பொது வருங்கால வைப்பு நிதி பிடித்தம், வீட்டு வாடகை

(D) Income Tax, PLI
வருமான வரி, அஞ்சலக காப்பீட்டு தொகை

22. What is meant by a Note File?
குறிப்புக் கோப்பு என்பது என்ன?

(A) An attachment to an existing file
ஒரு கோப்பின் அடுத்த தொகுதி

(B) A copy of old file obtained from Record
பதிவறையில் இருந்து பெற்ற பழைய கோப்பின் நகல்

(C) A note stating the gist of the subject dealt with accompanies the main file
ஒரு நடப்புக் கோப்பின் சாராம்சம் அடங்கிய குறிப்புத்தாள்கள்

(D) None of the above
இவற்றில் ஏதும் இல்லை

23. When a petition is rejected, whether the reason for the rejection can be informed to the Petitioner?
ஒரு மனு நிராகரிக்கப்படும் போது, மனுதாரருக்கு நிராகரிக்கப்படுவதற்கான காரணம் தெரிவிக்கப்படுமா?

(A) Yes, to be informed
ஆம் தெரிவிக்கப்படும்

(B) No, in case if specifically mentioned by the Officer
இல்லை தலைமை அலுவலர் குறிப்பாக தெரிவிக்கும் பட்சத்தில் மட்டும்

(C) May be marked
தேவையில் நகலிடலாம்

(D) Discretion of Section head
பிரிவு தலைவரின் முடிவு படி

24. With regard to usage of proper Tamil Words in preparing drafts, which book should be referred by a seat Junior Assistant/ Assistant?
அலுவலக நடைமுறைகளில் குறிப்பிட்ட தமிழ் சொற்கள் பயன்படுத்துகையில் இருக்கையாளர்கள் இளநிலை உதவியாளரால் எந்த புத்தகத்தினை பயன்படுத்தலாம்?

(A) Dictionary
அகராதி

(B) Tamil Dictionary
தமிழ் அகராதி

(C) Administrative Glossary
ஆட்சி சொல் அகராதி

(D) On their own wish
அவரவர் விருப்பப்படி

25. What denotes the meaning of disposal of a file as "N–Dis"?
"உமு" என்று முடிக்கப்படும் கோப்புக்கள் எதனை குறிப்பிடுகின்றன?

(A) Permanent Disposal
நிரந்தர முடிவு

(B) Disposed after 5 years
ஐந்தாண்டு முடிவு

(C) Immediate disposal
உடன் முடிவு

(D) None of the above
இவற்றில் ஏதுமில்லை

26. Who is the competent authority for the destruction of old records?
பழைய கோப்புக்களை அழிப்பதற்கான அதிகாரம் பெற்ற அலுவலர் யார்?

(A) Individual Assistant can do on his own
இருக்கையாளர் சொந்த விருப்பத்தின்படி

(B) Office Superintendent
அலுவலக கண்காணிப்பாளர்

(C) By the Head of Office only
அலுவலகத் தலைமை அலுவலர்

(D) District Head
மாவட்ட தலைவர்

27. What is called as "Arrear List"?
"நிலுவைப்பட்டியல்" என்பது என்ன?

(A) A Register maintained by Superintendent
தண்காணிப்பாளரால் பராமரிக்கப்படும் ஒரு பதிவேடு

(B) A list of pending files maintained by seat Assistant
இருக்கையாளரால் பராமரிக்கப்படும் நிலுவை கோப்புகள் பற்றிய குறிப்பேடு

(C) A List maintained by Record clerk
பதிவறை எழுத்தர் பராமரிக்கும் பட்டியல்

(D) A Note submitted to the Head of Office
அலுவலகத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும் ஒரு குறிப்புரை

28. What is the meaning of Distribution Register?
பகிர்மானப் பதிவேடு என்பது என்ன?

(A) Register of distribution of Tapals
அலுவலகத்திற்கு பெறப்படும் கடிதங்களை எண்ணிட்டு பகிர்ந்தளிக்கும் பதிவேடு

(B) Distribution of Records
பதிவறை கோப்புகள் வழங்கும் பதிவேடு

(C) Distribution of important keys
முக்கிய சாவிகளை பகிர்ந்தளிக்கும் பதிவேடு

(D) Distribution of Cash
ரொக்க விநியோகம் பதிவு செய்யப்படும் பதிவேடு

29. While keeping the record files, how they should be kept?
பதிவறையில் கோப்புகளை அடுக்கி வைக்கையில் எவ்வாறு வைக்கப்பட வேண்டும்?

(A) Vertical
செங்குத்தாக

(B) side by side
ஒன்றின் அருகில் ஒன்றாக

(C) One by one
ஒன்றன் கீழ் ஒன்றாக

(D) On their own choice
அவரவர் விருப்பப்படி

30. What is the meaning of Periodicals?
கால முறை அறிக்கைகள் என்பது என்ன?

(A) Register of records
பதிவுகளின் குறிப்பேடு

(B) Records of government publications
அரசு பதிப்புகளின் குறிப்பேடு

(C) Submission of reports periodically
ஒவ்வொரு குறிப்பிட்ட கால இடை வெளியில் அனுப்பப்பட வேண்டிய அறிக்கைகள் பற்றியது

(D) Maintenance of Personal Registers
தன்பதிவேடுகள் பராமரிப்பு

31. Who is the authority empowered to grant study leave to Government servant?
அரசு ஊழியருக்கு கல்வி விடுப்பு அனுமதிக்கும் அதிகாரம் படைத்தவர்?

(A) Head of department
துறைத்தலைவர்

(B) Appointing authority
பணி நியமன அலுவலர்

(C) Government
அரசு

(D) Educational institution
கல்வி நிறுவனம்

32. Whether withholding of increments of pay of government servant for his failure to pass any Departmental examination in accordance with the rules can be treated as Penalty?
ஒரு அலுவலர் துறைத் தேர்வு தேர்ச்சி பெறாமைக்காக அவரது ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்படுவது என்பது தண்டனையாக கருதப்படுமா?

(A) Yes
ஆம்

(B) Subject to approval the Government
அரசின் ஒப்புதலுடன்

(C) No
இல்லை

(D) Discretion of the Head of Department
அலுவலக தலைவரின் முடிவின்படி

33. In any case where more than one Government servant of the same Department are jointly involved or whose cases are interconnected, who is the authority competent to initiate disciplinary proceedings?
ஒரு துறையில் பணிபுரியும் ஒரு அலுவலர் ஏனைய அலுவலர்களுடன் சேர்ந்து குற்றம் சாட்டப்பட்டு குற்ற நிகழ்வு ஒன்றுக்கொன்று தொடர்புடையதெனில் குற்றத்தாள் வழங்க தகுதி பெற்ற அலுவலர் யார்?

(A) Government
அரசு

(B) shall be the immediate higher authority in that Department
அலுவலர் பணிபுரியும் அலுவலகத் தலைமைக்கு அடுத்த நிலை அலுவலர்

(C) Governor
ஆளுநர்

(D) Head of Office
அலுவலகத் தலைவர்

34. When a final order has been issued to an Accused Officer,, how many days he will granted to file his appeal before the appellate authority?
ஒரு குற்ற வழக்கில் இறுதி ஆணை ஒரு அலுவலருக்கு வழங்கப்பட்ட பின்னர் அவர் மேல் முறையீடு செய்ய எத்தனை நாட்கள் வழங்கப்படும்?

(A) 30
(B) 45
(C) 60
(D) 75

35. Who is the competent authority to impose suspension in cases of Members of State Services, where the appointing authority is other than State Government?
மாநில அரசுப் பணியில் பணிபுரிந்து வரும் அலுவலர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனில் அதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர் யார்?

(A) Appointing Authority
நியமன அலுவலர்

(B) District head
மாவட்ட தலைமை

(C) Zonal Head
மண்டல தலைமை

(D) Head of Department
துறைத் தலைமை

36. Whether "Censure" can be treated as a Punishment?
ஒரு குற்ற நிகழ்வில் "கண்டனம்" என்பது தண்டனையாக கருதப்படுமா?

(A) Yes
ஆம்

(B) Subject to the approval of Government
அரசு ஒப்புதல் இருப்பின்

(C) Subject to approval of Head of Department
துறைத்தலைமை ஒப்புதலுடன்

(D) Will not be considered as punishment
தண்டனையாக கருதப்படமாட்டாது

37. During the course of enquiry whether that the accused Government Servant may take the assistance of any retired Government servant to present the case on his behalf of him?
ஒரு குற்றவியல் நடைமுறை விசாரணையின்போது ஒரு குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவரை உதவிக்கு வைத்துக்கொள்ள அனுமதிக்கலாமா?

(A) Yes
ஆம்

(B) Subject to the approval of Government
அரசு அனுமதிப்பின்

(C) Subject to the approval of Head of Department
துறைத்தலைமை அனுமதியுடன்

(D) No
இல்லை

38. A member of a service may be placed under suspension from service, where–
ஒரு அரசு அலுவலர் எந்த சூழ்நிலையில் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்படலாம்?

(A) When he does not take action in a file
ஒரு கோப்பில் நடவடிக்கை எடுக்காத போது

(B) He prepares a wrong draft in a file
ஒரு கோப்பில் தவறான தகவலை தெரிவிக்கும்போது

(C) Where–a disciplinary proceedings against him is contemplated or is pending
ஒரு குற்றம் நடைபெற்று குற்றவியல் நடைமுறை தொடர முகாந்திரம் உள்ள சூழ்நிலையில்

(D) None of the above
இவற்றில் ஏதும் இல்லை

39. Whether an accused Officer shall be allowed to cross examine the Government witness?
ஒரு குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் குற்றம் தொடர்பான சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கலாமா?

(A) Yes
ஆம்

(B) No
இல்லை

(C) If Government approves
அரசு அனுமதிப்பின்

(D) If Head of Department approves
துறைத் தலைமை அனுமதிப்பின்

40. Whether an accused Officer should submit his final explanation after an Enquiry is over?
ஒரு குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் விசாரணை முடிவடைந்தபின் இறுதி சமாதானம் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படலாமா?

(A) Yes
ஆம்

(B) No
இல்லை

(C) If he wishes
அவர் விரும்பினால்

(D) If Head of Department asks
துறைத்தலைமை அனுமதியுடன்

41. Whether the normal increments can be sanctioned to an Accused Officer in case of punishment (Without cumulative effect) cases after the period of punishment?
ஒரு குற்ற நிகழ்வில் இறுதி ஆணை பிறப்பிக்கையில் ஒருவரது அடுத்த ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி தள்ளிவைக்கும் போது தண்டனை காலம் முடிந்த பின் அவரது விடுபட்ட ஊதிய உயர்வினை வழங்கலாமா?

(A) If Head of Department approves
துறைத்தலைமை அனுமதிப்பின்

(B) No
இல்லை

(C) If he wishes
அவர் விரும்பினால்

(D) Yes
ஆம்

42. Whether a quetionarie form should be given along with the Charge sheet issued under Rule 17 (a) to an Accused Officer?
17(அ) குற்றத்தாள் வழங்குகையில் குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு வினாப்படிவம் இணைப்பாக வழங்கப்படுகிறதா?

(A) Not necessary
தேவையில்லை

(B) Yes should be enclosed
ஆம் இணைக்கப்பட வேண்டும்

(C) Discretion of issuing authority
குற்றத்தாள் வழங்கும் அலுவலரின் விருப்பத்தை பொருத்தது

(D) If Head of Department asks
துறைத் தலைமை விரும்பினால்

43. Whether an Accused Officer shall be allowed to peruse the documents connected with the charges framed?
குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் குற்றம் தொடர்பான ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கலாமா?

(A) No
இல்லை

(B) Yes should be allowed during Office hours
அலுவலக வேலை நேரத்தில் பார்வையிட அனுமதிக்கலாம்

(C) Discretion of issuing authority
குற்றத்தாள் வழங்கும் அலுவலரின் விருப்பத்தை பொருத்தது

(D) If Head of Department asks
துறைத் தலைமை விரும்பினால்

44. Whether the Accused Officer shall be allowed to produce New witness in support after conclusion of enquiry?
குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் இறுதியாக “புதிய சாட்சிகள்” ஏதேனும் அவருக்கு சாதகமாக கொண்டுவர விழைந்தால் அனுமதி வழங்கலாமா?

(A) No
இல்லை

(B) Yes can be allowed under “New Witness”
ஆம் புதிய சாட்சிகளை அனுமதிக்கலாம்

(C) Discretion of issuing authority
குற்றத்தாள் வழங்கும் அலுவலரின் விருப்பத்தை பொருத்தது

(D) If head of Department asks
துறைத் தலைமை விரும்பினால்

45. Whether an Enquiry Officer can delegate his responsibility to examine the charges to any one else?
குற்றத்தாளின் விசாரணை அலுவலர் அவர் விரும்பினால் அவரது விசாரணை அதிகாரத்தினை பிறிதொரு அலுவலருக்கு வழங்கலாமா?

(A) No
கூடாது

(B) Yes, he can delegate on his own to someone else
ஆம் அவர் விரும்பினால் வழங்கலாம்

(C) Discretion of issuing authority
குற்றத்தாள் வழங்கும் அலுவலரின் விருப்பத்தை பொருத்தது

(D) If Head of Department asks
துறைத் தலைமை விரும்பினால்

46. Who is the appointing authority for the post of Forest Guard in the Forest Department?
வனத்துறையில் வனக்காப்பாளர் பதவிக்கான நியமன அலுவலர் பெயர் என்ன?

(A) Government
அரசு

(B) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(C) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(D) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

47. When a final order has been issued by the District Forest Officer to an Accused Officer, to whom he should submit his appeal?
ஒரு குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு மாவட்ட வன அலுவலரால் இறுதி ஆணை வழங்கப்பட்ட நிலையில் அவர் எந்த அலுவலருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும்?

(A) Government
அரசு

(B) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(C) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(D) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

48. When a final order has been issued to an Accused Officer in a Disciplinary case, how many days will the Accused Officer have to submit his appeal to the next Appellate authority?
ஒரு குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு இறுதி ஆணை வழங்கப்பட்ட பின்னர் அவர் எத்தனை நாட்களுக்குள் மேல்முறையீடு அனுமதிக்கப்படுவார்?

(A) 30 days
30 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 45 days
45 நாட்கள்

(D) 15 days
15 நாட்கள்

49. Forest Guards/ Forest Watchers are coming under which category of the following service?
வனக்காவலர்/வனக்காப்பாளர் ஆகிய பதவிகள் எந்த பணியமைப்பின் கீழ் வருகின்றன?

(A) Tamil Nadu Ministerial Service
தமிழ்நாடு அமைச்சுப்பணி

(B) Tamil Nadu Basic Service
தமிழ்நாடு அடிப்படை பணி

(C) Tamil Nadu General Service
தமிழ்நாடு பொது விதிகள்

(D) Tamil Nadu Subordinate Service
தமிழ்நாடு வனச்சார்நிலைப் பணி

50. Forest Range Officers are submitting their Diaries to the District Forest Officers
வனச்சரக அலுவலர்கள் தமது நாட்குறிப்புக்களை எத்தனை நாட்களுக்கு ஒரு முறை சமர்பிக்க வேண்டும்?

(A) Every week
ஒவ்வொரு வாரமும்

(B) Every month
ஒவ்வொரு மாதமும்

(C) Every fortnight
ஒவ்வொரு 15 நாட்களுக்கும்

(D) Once in two months
இரண்டு மாதத்திற்கு ஒரு முறை

51. Malies in Forest Department are engaged in
வனத்துறையில் “மாலி” க்கள் எந்த பணிக்காக பயன்படுத்தப்படுகின்றனர்?

(A) Protection work only
பாதுகாப்பு பணிக்காக

(B) Attending only Court Cases
நீதிமன்றப்பணி

(C) Nurseries
தோட்டப்பணிகள்

(D) Sandalwood / Timber Depots
சந்தனமர/மர கிடங்குகள்

52. Single Lock Officers are Designated in
வனத்துறையில் "ஒற்றைப்பூட்டு அலுவலர்" என்ற பணியிடம் எங்கு பயன்படுத்தப்படுகிறது?

(A) Forest Ranges to attend Court cases
நீதிமன்ற பணி வனச்சரகர்கள்

(B) Working Plan Divisions
செயல் திட்ட கோட்டங்களில்

(C) National Parks
தேசிய பூங்காக்களில்

(D) Sandalwood Depot
அரசு சத்தனமர கிடங்குகளில்

53. Government Sandalwood Sale Depots are located in
அரசு சந்தனமர கிடங்குகள் எங்கெங்கெல்லாம் அமைந்துள்ளன?

(A) Salem/Tirupattur/Sathiymangalm
சேலம் / திருப்பத்தூர் / சத்தியமங்கலம்

(B) Madurai/Tirunelveli/Dindigul
மதுரை / திருநெல்வேலி / திண்டுக்கல்

(C) Chennai/Tiruvallur/Vellore
சென்னை / திருவள்ளூர் / வேலூர்

(D) Dharmapuri/Tiruppur/Coimbatore
தர்மபுரி / திருப்பூர் / கோயமுத்தூர்

54. At what intervals the Arms under the custody of Forest Department should be produced before the Commandant, Arms Division of Police Department for inspection?
வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை காவல்துறை ஆயுதப்படை பிரிவில் ஆய்வுக்கு கொண்டு சென்று வரவேண்டும்?

(A) Once in 3 months
3 மாதத்திற்கு ஒரு முறை

(B) Once in 6 months
6 மாதத்திற்கு ஒரு முறை

(C) Annually
வருடம் தோறும்

(D) Once in 2 years
இரண்டு வருடத்திற்கு ஒரு முறை

55. Red Sanders can be purchased/sold and exported by every one?
செம்மரங்களை தனியர் ஒருவர் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்ய அனுமதி உண்டா?

(A) Yes
ஆம்

(B) Only by Forest Department
வனத்துறை மட்டும்

(C) If Government approves
அரசு ஆணை வழங்கினால்

(D) By Forest Department only with the approval of Government of India
மத்திய அரசின் அனுமதியுடன் மட்டுமே வனத்துறை வாயிலாக செய்யப்படும்

56. What is the minimum height required for selection of Forest Subordinates?
வனத்துறை சார்நிலை பணியாளர்கள் நியமனத்திற்கு அடிப்படை உயரம் என்ன?

(A) 171 cms
171 செ.மீ

(B) 165 cms
165 செ.மீ

(C) 163 cms
163 செ.மீ

(D) 168 cms
168 செ.மீ

57. A duty not includes
கீழ்குறிப்பிட்ட இனம் பணிக்காலத்தில் சேராது?

(A) Probation period
தகுதிகாண் பருவம் காலம்

(B) Joining time
பணியேற்பிடை காலம்

(C) Un-regularised unauthorized absence not regularized
வரண்முறை செய்யப்படாத தகவல் ஏதுமின்றி பணிக்கு அஜராகாத காலம்

(D) Unearned leave period
ஈட்டா விடுப்பு

58. Assistant Conservator of Forests are coming under
உதவி வனப் பாதுகாவலர்கள் எந்த பணிகளின் கீழ் வருகின்றனர்?

(A) All India Service
அகில இந்திய பணி

(B) State Subordinate Service
மாநில சார்நிலைப்பணி

(C) Tamilnadu Forest Service
தமிழ்நாடு வனப்பணி

(D) Tamilnadu General Subordinate service
தமிழ்நாடு பொது சார்நிலை பணி

59. For the selection of male Forest Guards, the minimum walking distance required to be completed in 4 Hours
ஆண் வனக்காப்பாளர் நியமனம் பெறும் தகுதிகளில் ஒருவர் 4 மணி நேரத்தில் எவ்வளவு தூரத்தினை கடக்க வேண்டும்?

(A) 20 kms
20 கி.மீ

(B) 25 kms
25 கி.மீ

(C) 16 kms
16 கி.மீ

(D) 12 kms
12 கி.மீ

60. Which one of the following Tiger Reserve/ National Park awarded with UNESCO Heritage Biosphere?
கீழ்கண்டவற்றில் எந்த பூங்கா புலி காப்பகம்/தேசிய பூங்கா யுனெஸ்கோவினால் பாரம்பரியம் மிக்க இயற்கை வாழ்விடமாக அறிவிக்கப்பட்டுள்ளது?

(A) Mudumalai Tiger Reserve
முதுமலை புலிகள் காப்பகம்

(B) Kodaikanal Wildlife Sanctuary
கொடைக்கானல் வன உயிரியல் சரணாலயம்

(C) Cauvery Wildlife Sanctuary
காவேரி வன உயிரின சரணாலயம்

(D) Kalakkad and Mundanthurai Tiger Reserve
களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

61. Which one of the following will not come under Forest General Subordinate Service?
கீழ்க்கண்ட பணிகளில் எந்த பணி தமிழ் நாடு வனப் பொதுப் பணி விதிகளின் கீழ் வராது?

(A) Junior Assistant
இளநிலை உதவியாளர்

(B) Forest Guards
வனக்காப்பாளர்

(C) Mali
மாலி

(D) Senior Draughting Officers
முதுநிலை வரைதொழில் அலுவலர்

62. Mali Posts are filled up from the
மாலி பதவிகள் எந்த பிரிவில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

(A) Forest Watchers
வனக்காவலர்கள்

(B) Forest Guards
வனக்காப்பாளர்கள்

(C) From among the persons working as Social Forestry Workers and Plot Watchers on daily wages
சமூக வன ஊழியர்கள் தோட்டக் காவலர்கள் மற்றும் தினக்கூலி பணியாளர்களின் பட்டியலில் இருந்து

(D) Direct
நேரிடையாக

63. Social Forestry Workers/Plot Watchers State Level Seniority list is being maintained by
சமூக வன ஊழியர்கள்/தோட்டக் காவலர்களின் மாநில முதுநிலை பட்டியல் யாரால் பராமரிக்கப்படுகிறது?

(A) Government
அரசால்

(B) Respective Conservator of Forests
மண்டல வனப்பாதுகாவலர்களால்

(C) Division Level
கோட்ட அளவில்

(D) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

64. Senior Draughting Officers are appointed
முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

(A) Directly
நேரிடையாக

(B) From Assistant Draughtsman
உதவி வரைவாளர் பதவியில் இருந்து

(C) From Draughting Officer
வரைதொழில் அலுவலரில் இருந்து

(D) Junior Draughting Officer
இளநிலை வரைதொழில் அலுவலர் பதவியில் இருந்து

65. The Appointing Authority for the post of Forest Range Officers
வனச்சரக அலுவலர்களின் நியமன அலுவலர் யார்?

(A) Government
அரசு

(B) District Forest Officers
மாவட்ட வன அலுவலர்கள்

(C) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

(D) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

66. Which is the newly created Tiger Reserve in Tamil Nadu?
தமிழ்நாட்டில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட புலிகள் காப்பகம் எது?

(A) Mudhumalai Tiger Reserve
முதுமலை புலிகள் காப்பகம்

(B) Kalakkad Mundanthurai Tiger Reserve
களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

(C) Anamalai Tiger Reserve
ஆனைமலை புலிகள் காப்பகம்

(D) Srivilliputhur–Meghamalai Tiger Reserve
ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்

67. Who is the competent authority to transfer a person from one circle to another circle?
ஒரு மண்டலத்தில் இருந்து மற்றொரு மண்டல மாறுதல் யாரால் மட்டும் வழங்க இயலும்?

(A) Conservator of forests
வனப்பாதுகாவலர்

(B) District Forest Officers
மாவட்ட வன அலுவலர்

(C) Government
அரசு

(D) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

68. The minimum basic training period for the post of Forest Guards
வனக்காப்பாளர்களுக்கான அடிப்படை பயிற்சி காலமானது

(A) Six Months
ஆறு மாதங்கள்

(B) Three months
மூன்று மாதங்கள்

(C) One Year
ஒரு வருடம்

(D) Four months
நான்கு மாதங்கள்

69. Selection of Foresters from Members of Tamilnadu Ministerial Service individuals are made out of
வனவர் பதவிக்காக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இருந்து தேர்வு செய்கையில் எந்த முறை கையாளப்படுகிறது ?

(A) Approval by Government
அரசு ஒப்புதலுடன்

(B) By the respective Division DFOs
கோட்ட அளவில் மாவட்ட வன அலுவலர்களால்

(C) By the Conservator of Forests
வனப்பாதுகாவலர்களால்

(D) Shall be finalized by the Selection Committee
தேர்வுக்குழு தெரிவு செய்யும் பட்டியலில் உள்ள பெயர்களில் இருந்து

70. Sandalwood Clerks are recruited by
சந்தனக்கட்டை எழுத்தர் பணியிடம் எந்த வகையில் நிரப்பப்படுகிறது ?

(A) By promotion
பதவி உயர்வு

(B) From Forest Guards
வனக்காப்பாளர் பதவியில் இருந்து

(C) Direct
நேரிடையாக

(D) From Social Forestry/ Plot Watchers
சமூக வன ஊழியர்/தோட்டக் காவலர் பிரிவில் இருந்து

71. The post of Junior Assistants are coming under the purview of
இளநிலை உதவியாளர் பணியிடங்கள் எந்த பணியமைப்பு விதிகளின் கீழ் வருகின்றன ?

(A) Tamilnadu Ministerial Services
தமிழ்நாடு அமைச்சுப்பணி

(B) Employment Exchanges
வேலைவாய்ப்பு அலுவலகங்கள்

(C) Tamilnadu General Subordinate Services
தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி

(D) Tamilnadu Basic Service
தமிழ்நாடு அடிப்படைபணி

72. The posts of Typists and Steno Typists are carrying identical scales of pay
தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான ஊதிய விகிதங்கள் ஒரே நிலையில் உள்ளனவா?

(A) Yes both are having some basic pay
ஆம் இரண்டுமே ஒன்று

(B) Different scales of pay
வெவ்வேறானவை

(C) Depends on the qualification
தகுதிக்கேற்ப மாறும்

(D) Decided by the appointing authority
நியமன அலுவலரின் முடிவுக்குட்பட்டது

73. Whether Appointment to the post of Superintendent in the Public Health and Preventive Medicine Department shall be made by promotion from among the holders of the posts of Assistants including Storekeepers in the category of Assistants?
பொது சுகாதாரத்துறையில் உதவியாளர் மற்றும் பண்டக காப்பாளர் பதவிகளில் இருந்து கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற தகுதியுடையவர்கள் ஆவரா?

(A) No
இல்லை

(B) Yes
ஆம்

(C) Subject to approval by TNPSC
தேர்வாணைய முடிவின்படி

(D) With the approval of Government
அரசு முடிவின்படி

74. If a Junior Assistant has been promoted as Assistant for how many years he can relinquish the said promotion?
ஒரு இளநிலை உதவியாளர் தமக்கு கிடைக்கும் உதவியாளர் பதவி உயர்வுக்கான பதவி உயர்வு வாய்ப்பினை எத்தனை ஆண்டுகளுக்கு துறக்கலாம்?

(A) Two years
இரண்டு ஆண்டுகள்

(B) One year
ஒரு ஆண்டு

(C) Three years
மூன்று ஆண்டுகள்

(D) Five years
ஐந்து ஆண்டுகள்

75. Whether a person who had worked as Steno–typists Grade–I and Steno–typists Grade–II between the 1st August 1992 and the 21st February 2001 shall be considered for promotion as Superintendent?
ஆகஸ்ட் 1, 1992 முதல் 21 பிப்ரவரி 2001 வரை உள்ள காலகட்டத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 1 மற்றும் 2 ஆகியவைகளில் பணிபுரிந்துள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்கள் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு பெற பரிசீலிக்கப்படுவார்களா?

(A) No
இல்லை

(B) If TNPSC approves
தேர்வாணைய இசைவின்படி

(C) Yes, if possess all required qualifications
ஆம் முறையாக தகுதி பெற்றிருப்பின்

(D) If the Head of Department patterns
துறைத்தலைமையின் முடிவின்படி

76. Who is the competent authority for declaration of probation for the Junior Assistants who are appointed under Compassionate Grounds?
கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்படும் இளநிலை உதவியாளர்களின் தகுதிகாண் பருவம் முடிக்க அதிகாரம் பெற்ற அமைப்பு எது?

(A) Head of the Department
துறைத்தலைமை

(B) Head of Office
அலுவலக தலைமை

(C) District Head
மாவட்ட தலைமை

(D) Government
அரசு

77. Duration of basic training period the newly appointed Junior Assistants should undergo
புதியதாக நியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்களின் அடிப்படை பயிற்சிக்காலம் எவ்வளவு?

(A) One Year
ஒரு வருடம்

(B) Six months
ஆறு மாதங்கள்

(C) Four months
நான்கு மாதங்கள்

(D) Two months
இரண்டு மாதங்கள்

78. Whether First increment of a newly recruited Junior Assistant can be sanctioned before declaration of his probation?
ஒரு புதியதாக பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் தகுதி காண் பருவம் நிறைவு செய்யும் முன்னதாக ஒரு ஊதிய உயர்வு பெற தகுதி உடையவரா?

(A) No
இல்லை

(B) If TNPSC approves
தேர்வாணையம் இசைவு தெரிவித்தால்

(C) On getting Government order
அரசாணை பெற்ற பின்னர்

(D) Yes
ஆம்

79. Whether a Typist shall be eligible for promotion as Assistant or to the posts which carry the scale of pay of Assistant in any department unless he has undergone training as Junior Assistant for a period of one year without detrimental to his Typist work
அரசு பணியில் ஒரு தட்டச்சர் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி நிறைவடையாத நிலையில் உதவியாளராக பதவி உயர்வு பெற தகுதி உடையவரா?

(A) Yes
ஆம்

(B) Subject to approval of TNPSC
தேர்வாணையம் இசைவு தெரிவித்தால்

(C) If ordered by Head of Department
துறைத்தலைமை ஆணையின்படி

(D) No
இல்லை

80. Every person appointed to a category by direct recruitment, shall be on probation for a total period of
நேரிடை நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் தகுதி காண் பருவத்தினை எவ்வளவு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும்?

(A) Three years within a continuous period four years
நான்கு தொடர் ஆண்டுகளில் மூன்று ஆண்டுகள்

(B) Five years
ஐந்து ஆண்டுகள்

(C) One year
ஒரு வருடம்

(D) Two years on duty within a continuous period of three years
மூன்று தொடர் ஆண்டுகளில் இரண்டு ஆண்டு கால பணிக்காலத்தை முடித்து இருக்க வேண்டும்

81. Appointed by Transfer means
மாறுதல் மூலம் நியமனம் என்பதன் பொருள்

(A) Direct appointment by TNPSC
தேர்வாணையம் மூலம் நியமனம்

(B) Appointment from Central Government
மத்திய அரசு மூலம் நியமனம்

(C) Appointment of a member of a service from one category to another category in the same service
ஒரு அலகில் இருந்து மற்றொரு அலகிற்கு மாறுதல் மூலம் நியமனம்

(D) Appointment from any other Lower category
கீழ் நிலையில் இருந்து மேல்நிலை பதவிக்கு நியமனம் செய்வது

82. Approved Candidates means
அங்கீகரிக்கப்பட்ட தேர்வாளர் (Approved Candidates) என்பதன் பொருள்

(A) List published by TNPSC
தேர்வாணையம் வெளியிடும் பட்டியல்

(B) List prepared by Head of Office
அலுவலகத் தலைமை வெளியிடும் பட்டியல்

(C) Names mentioned in Attendance Register
வருகை பதிவேட்டில் உள்ள பெயர்

(D) A candidate whose name appears in an authoritative list
அதிகாரம் பெற்ற அலுவலர் வெளியிடும் பட்டியலில் உள்ள நபரது பெயர்

83. As per Tamil Nadu Government Servants (Condition of Service) Act 2016, a "Commission" means
தமிழ் நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனை) விதிகள் 2016ன் படி "ஆணையம்" என்பதன் பொருள்

(A) Administrative Tribunal
மாநில நிர்வாக தீர்ப்பாயம்

(B) Police Commission
காவல் ஆணையம்

(C) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(D) Planning Commission
திட்டக்குழு

84. Persons who have been discharged from the Army, Navy or Air Force or from any other kind of war service for any reasons other than those specified below shall not be eligible for the concessions allowed by this Act 2016, Which one of the following admissible?
இந்திய இராணுவம், விமானப்படை, கப்பற்படை போன்றவற்றில் இருந்து வெளியேறியவர்கள் பின்வரும் எந்த சலுகையும் அனுபவிக்க தமிழ் நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம் 2016ன் படி உடைமை பெற்றவர்கள் அல்ல கீழ்கண்ட எந்த ஒன்று அனுமதிக்கத்தக்கது ?

(A) Medical invalidation
மருத்துவ தகுதியின்மை

(B) Immobilization
பணி நிறுத்தம்

(C) Completion of engagement
பணிக்காலம் முடிவு

(D) Unfit for service
பணிக்கு தகுதியானவர் அல்ல

85. The following punishment can be awarded for the charges framed under rule 17(a) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுக்கமும், மேல்முறையீடும்) விதி 17 (அ)-ன் வழங்கப்பட்ட குற்றத்தாளிற்கு கீழ்கண்ட தண்டனைகள் வழங்கலாம்

(A) Withholding of increments without cumulative effect
திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு தள்ளி வைப்பு

(B) Compulsory retirement
கட்டாய ஓய்வு

(C) Removal from service
பணி நீக்கம்

(D) Withholding of increments with cumulative effect
திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு தள்ளி வைப்பு

86. A member of service, who has been appointed to another service and is a probationer or approved probationer in the latter service, shall not be appointed to any other service for which he may be an approved candidate, unless he relinquishes his right in the latter service. True or False?
ஒரு அலகில் பணிபுரியும் ஒருவர் மற்றொரு அலகிற்கு நியமனம் செய்யப்படுகையில் அவர் இரண்டாவதாக அவர் முந்தைய அலகின் பணி உரிமையினை துறக்காத நிலையில் தகுதி காண் பருவத்தினராகவோ அல்லது தகுதி காண் பருவம் முடித்தவராகவோ வைப்பதற்கு இடமில்லை. இது சரியா / தவறா?

(A) False
தவறு

(B) Shall not be re appointed
நியமனம் பெற தகுதியற்றவர் ஆவார்

(C) Only by the Government
அரசு வாயிலாக மட்டுமே

(D) True
சரி

87. What is the maximum age limit for making a compassionate appointment?
கருணை அடிப்படை நியமனத்திற்கு அதிகபட்ச வயது என்ன?

(A) 25 years
25 ஆண்டுகள்

(B) 30 years
30 ஆண்டுகள்

(C) 35 years
35 ஆண்டுகள்

(D) 32 years
32 ஆண்டுகள்

88. Where the posts are outside the purview of the Commission, recruitment shall be made by calling for names of eligible candidates by
தேர்வாணைய வரையறைக்கு வெளியில் உள்ள பணியிடங்களை எந்த வகையில் நிரப்பப்படுகிறது?

(A) Calling list from Employment Exchange
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெயர்களை பெற்று

(B) By making advertisement in two prominent dailies
இரண்டு செய்தித் தாள்களில் விளம்பரம் செய்வதன் மூலம்

(C) By head of office on his own
அலுவலகத் தலைவர் அவருடைய விருப்பத்தின் அடிப்படையில்

(D) Both by calling list from Employment exchange and issuing Advertisement in Two prominent dailies
வேலைவாய்ப்பு நிறுவனத்தின் வாயிலாக பெயர் பட்டியல் பெற்றும், செய்தித் தாள்களில் விளம்பரம் செய்வது ஆகிய இரண்டு வழிகளை கடைபிடித்து

89. Whether a person shall be eligible for appointment to any service by direct recruitment if he does not satisfy the medical fitness?
தேர்வு செய்யப்பட்ட ஒரு தனியர் மருத்துவ தகுதி சான்று பெறாத நிலையில் நியமனம் செய்யப்பட தகுதி உடையவராவாரா?

(A) No
இல்லை

(B) Discretion of the appointing authority
நியமன அலுவலரின் விருப்பம்

(C) Decision of the Head of Department
துறைத் தலைமையின் விருப்பம்

(D) Decision of the TNPSC
தேர்வாணையத்தின் இசைவின்படி

90. Every candidate claiming to be a "destitute widow" shall produce a certificate in the Form specified in Schedule–X, from the
பணி நியமனம் கோரும் தேர்வாளர் ஒருவர் "விதவை" ஆக இருப்பின் அதற்காக சான்றிதழை ஷெல்ட்யூல்–X எவரிடம் இருந்து பெற வேண்டும்?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Employment Officer
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்

(C) Revenue Divisional Officer/Sub Collector
சார் ஆட்சியர் / கோட்டாட்சியர்

(D) Thasildar
வட்டாட்சியர்

91. Who has to close the Attendance Register of an Office daily?
அலுவலகத்தில் வருகை பதிவேட்டினை அனுதினமும் முடிவு செய்ய வேண்டிய அலுவலர் யார்?

(A) Head of Office
அலுவலகத் தலைவர்

(B) Section Head/Superintendent
பிரிவு தலைவர் / கண்காணிப்பாளர்

(C) Respective Seat Clerk
இருக்கை எழுத்தர்

(D) Record clerk
பதிவறை எழுத்தர்

92. Revenue Business Statement is being submitted for every
Revenue Business Statement என்பது எத்தனை காலத்திற்கு ஒரு முறை அனுப்பப்படுகிறது?

(A) Month
ஒரு மாதம்

(B) Year
ஒரு வருடம்

(C) For every six months
ஆறு மாதத்திற்கு ஒரு முறை

(D) For every two months
இரண்டு மாதத்திற்கு ஒரு முறை

93. Stamp account should be closed
அஞ்சல் வில்லை கணக்கு எவ்வளவு முடிக்கப்படுகிறது?

(A) Daily
அன்றாடம்

(B) For every two days
இரு நாட்களுக்கு ஒரு முறை

(C) Once in a week
வாரம் ஒரு முறை

(D) Once in a month
மாதம் ஒரு முறை

94. Promotion from the Posts of Assistants to Superintendents are approved by
உதவியாளர் பதவியில் இருந்து கண்காணிப்பாளர் பதவி உயர்வு பட்டியல் யாரால் வழங்கப்படுகிறது?

(A) Head of Office
அலுவலக தலைமையால்

(B) Government
அரசு

(C) Head of Department
துறைத் தலைமையால்

(D) TNPSC
தேர்வாணையம்

95. When a book is issued to a clerk in which register the same needs to be entered in?
நூலக புத்தகம் ஒன்று ஒரு இருக்கையாளருக்கு வழங்கப்படும் போது எதில் பதிவு செய்யப்படும்?

(A) Book issue Register
புத்தகம் வழங்கு பதிவேடு

(B) Distribution Register
பகிர்மான பதிவேடு

(C) Library Register
நூலக பதிவேடு

(D) Personal Register
தன் பதிவேடு

96. Candidates for appointment by direct recruitment to any of the categories in TNPSC class IV must be able to
தமிழ் நாடு அரசுப்பணி அலகு 4 பிரிவில் நியமனம் செய்யப்படும் ஒரு அரசு அலுவலர்

(A) Able to read
படிக்க தெரிந்திருக்க வேண்டும்

(B) Able to read and write in Tamil
தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்

(C) Read and write English
ஆங்கிலத்தில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்

(D) Not necessary to read and write
எழுதப்படிக்க தெரிந்திருக்க தேவையில்லை

97. From where the appointing authority shall call for a panel of names from informing that office of the anticipated vacancies of the posts and the qualifications prescribed for such posts.
ஒரு நியமன அலுவலர் தமது அலுவலகத்தில் எதிர்நோக்கப்படும் காலிப் பணியிடங்களுக்கு எந்த அமைப்பிடம் இருந்து தகுதியுள்ள நபர்களின் பட்டியலை கோருவார்?

(A) District Collector Office
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

(B) TNPSC
தேர்வாணையம்

(C) Government
அரசு

(D) The Employment Exchange concerned
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்

98. Candidates for appointment by direct recruitment to any of the posts other than those in Classes I and II must not have completed how many years on the date of appointment
பிரிவு 1 மற்றும் 2 ஆகியவை அல்லாத ஏனைய பணிகளுக்கு போட்டியிடும் நியமனத்தின் போது ஒரு தனியர் எத்தனை வயதினை கடந்திருக்கக்கூடாது?

(A) 25 years of age
25 ஆண்டுகள்

(B) 30 years of age
30 ஆண்டுகள்

(C) 28 years of age
28 ஆண்டுகள்

(D) 32 years of age
32 ஆண்டுகள்

99. Education Qualification for the basic service
தமிழ்நாடு அடிப்படை பணியில் குறைந்தபட்ச கல்வித் தகுதி

(A) Degree
பட்டப்படிப்பு

(B) Plus 2
பிளஸ் 2

(C) SSL.C
எஸ்.எஸ்.எல்.சி

(D) VIII Pass
8ம் வகுப்பு தேர்ச்சி

100. Who shall be eligible for appointment as Chowkidar (Category 2 of Class II) by direct recruitment?
சௌகிதார் (வகை 2) பதவிக்கு நேரடி நியமனத்திற்கு தகுதியான தனியர் யார்?

(A) Disabled persons
மாற்றுத்திறனாளிகள்

(B) Female candidates
பெண் தேர்வாளர்கள்

(C) No person other than an Ex–serviceman
முன்னாள் ராணுவத்தினர் மட்டும்

(D) None of the above
இவற்றில் ஏதுமில்லை